# 06 திருக்குறள்

## ஊக்கமுடைமை



தமிழ் இலக்கியங்களிலே அறக் கருத்துகளைக் கூறும் சிறந்த நூல்களுள் திருக்குறளும் ஒன்றாகும்.இது ஈரடிக்குறள் வெண்பா யாப்பினால் இயற்றப்பட்டுள்ளது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்ட இந்நூலானது 133 அதிகாரங்களையும் 1330 குறட்பாக்களையும் கொண்டுள்ளது. திருக்குறளுக்குப் பலர் உரை எழுதியிருப்பினும் பரிமேலழகர் உரையே சிறப்பாகப் போற்றப்படுகிறது.

ஊக்கமுடைமை என்ற இவ்வதிகாரம் பொருட்பாலில் இடம்பெற்றுள்ளது. இது, செய்யும் செயற்பாட்டில் மனவெழுச்சி உடையவராக இருத்தல் பற்றிக் கூறுவதாக அமைந்துள்ளது.

1. **உடைய ரெனப்படுவ தூக்கம்; அஃதிலார்**
   **உடைய துடையரோ மற்று?**

   ஒருவர் ஒன்றை உடையவர் எனின், அவர் ஊக்கத்தை உடையவரே; அவ்வூக்கம் இல்லாதவர் மற்றை எவற்றை உடையவராயினும் உடையவர் ஆவரோ? (ஆகார்.)

2. **உள்ள முடைமை உடைமை; பொருளுடைமை**
   **நில்லாது நீங்கி விடும்..**

   ஊக்கம் உடைமையே நிலையான உடைமையாகும்;
   பொருளுடைமையோ, நிலைபெறலின்றி நீங்கிப் போகும்.



இலவசப் பாட நூல் விநியோகத்திற்காக

3. **ஆக்கம் இழந்தேம் என் றல்லாவார், ஊக்கம்**
**ஒருவந்தம் கைத்துடை யார்.**

ஊக்கத்தை உறுதியான கைப்பொருளாக உடையவர்,எம் செல்வத்தை இழந்து விட்டோம் என்று வருந்திக் கூறும் நிலைக்கு ஆட்படார்.

4. **ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும்; அசைவிலா**
**ஊக்க முடையா னுழை**

தளராத ஊக்கம் உடையவனிடத்து வழிகேட்டுச் செல்வம் தானே வந்து சேரும்.

5. **வெள்ளத் தனையமலர் நீட்டம்; மாந்தர்தம்**
**உள்ளத் தனைய துயர்வு**

நீர்ப்பெருக்கின் அளவிற்குத் தகுந்தவாறு நீர்ப்பூவின் தண்டின் நீளம் அமையும்; அதுபோல், மாந்தரின் ஊக்கத்தின் அளவுக்குத் தகுந்தவாறு உயர்வு அமையும்.

6. **உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்; மற்றது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து**

நினைப்பவற்றை எல்லாம் உயர்ந்தவையாய் நினைக்க வேண்டும். உடனே நிறைவேறாவிடினும் விடாமல் மேற் கொள்ள வேண்டிய பெருமையுடையவை அவை.

7. **சிதைவிடத் தொல்கார் உரவோர்; புதையம்பிற்**
**பட்டுப்பா டூன்றும் களிறு**

அம்பு தன் உடலில் ஆழப் புகுந்தாலும் அதைத் தாங்கித் தன் கடமையில் சோராமல் ஊன்றி நிற்கும் யானை; அதுபோல் ஊக்க முடையார் தமக்கு அழிவு வருமிடத்தும் சிறிதும் கடமையில் சோர்வடையார்.

8. **உள்ளம் இலாதவர் எய்தார், உலகத்து**
**'வள்ளியம்' என்னும் செருக்கு**

பரந்த உலகில் யாம் கொடைத் தன்மை உடையோம் என்னும் பெருமையை ஊக்கமில்லாதவர் என்றும் அடைய மாட்டார்.

9. **பரியது கூர்ங்கோட்ட தாயினும், யானை**
**வெரூஉம் புலிதாக் குறின்.**

உடல் பெரியதாகவும், கூர்மையான கொம்பு உடையதாகவும் யானை இருப்பினும் (இவ்விரண்டும் இல்லாத) புலி ஊக்கமாகத் தாக்கும்போது அஞ்சி வெருண்டு விடும்.

10. **உரமொருவற் குள்ள வெறுக்கை அஃதில்லார்**
**மரம்மக்க ளாதலே வேறு.**

ஒருவனுக்கு உள்ளத்தில் உள்ளதாகிய பெருவளம் ஊக்கமேயாம்; அதனை இல்லாதவர் மரம் போல்வர்; மக்கள் என்னும் பெயரும் வடிவமுமே வேறுபாடு ஆகும்.

## கிரகித்தற் பயிற்சி

1. ஊக்கமுடைமை எனப்படுவது யாது?
2. 'மரம் போல்வர்' என்று குறிப்பிடப்படுபவர் யாவர்?
3. இரண்டாம் மூன்றாம் குறட்பாக்களை கொண்டுகூட்டி எழுதுக.
4. ஊக்கமுடையார் அடையும் சிறப்புக்கள் யாவை?
5. ஊக்கம் உடையாரது உயர்ச்சி பற்றி விளக்குக.
6. ஊக்கம் இல்லாதாரின் இகழ்ச்சி பற்றி வள்ளுவர் கூறுமாற்றை விளக்குக.
7. ஊக்க மிகுதியைக் குறிப்பிடுவதற்காக கையாளப்பட்டுள்ள உவமை யாது? விளக்குக.
8. பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.

| | | | |
|---|---|---|---|
| i. | அஃதிலார் | ii. | அசைவிலா |
| iii. | பொருளுடைமை | iv. | உள்ளுவதெல்லாம் |
| v. | உடையதுடையரோ | vi. | ஊக்கமுடையானுழை |
| vii. | உள்ளத்தனையதுயர்வு | viii. | சிதைவிடத்தொல்கார் |
| ix. | கூர்ங்கோட்டதாயினும் | x. | உரமொருவற்குள்ள |

## செயற்பாடு

**குழுவாக இணைந்து பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.**

1. "ஊக்கமுடைமை" எனும் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள உவமைகளை எடுத்துக் காட்டுங்கள்.
2. ' உள்ளத்தனையது உயர்வு' என்ற தலைப்பில் கட்டுரை ஆக்குங்கள்.
3. ஊக்கமுடைமை தொடர்பான வேறு நீதிப் பாடல்களைத் தேடி இசைகூட்டிப்பாடுங்கள்.

# இலக்கணம்

## சார்பெழுத்து

முதலெழுத்துக்களைச் சார்ந்து நின்று இயங்குபவை சார்பெழுத்துக்களாகும். உயிர்மெய்யெழுத்துக்கள், ஆய்தம் இவற்றுடன் முதலெழுத்துக்களுள் சில சொற்களில் அமையும் போது, தமக்குரிய ஒலிப்புமுறையில் ஒலிக்காது, சிறிது வேறுபட்டு (நீண்டு / குறுகி) ஒலிப்பனவாக அமைந்தனவும் சார்பெழுத்துக்களாகக் கொள்ளப்படுகின்றன.

### 01. குற்றியலுகரம்

இதழ் குவியாது உச்சரிக்கப்படும் உகரமே குற்றியலுகரம் எனப்படுகின்றது. குறுகி ஒலிக்கும் உகரம் என்பது இதன் பொருள். க், ச், ட், த், ப், ற் ஆகிய வல்லின மெய்களில் உகரம் ஏறி நிற்கும் போது அவை பின்வருமாறு அமையும்.

| | | | | |
|---|---|---|---|---|
| க் | + | உ | = | கு |
| ச் | + | உ | = | சு |
| ட் | + | உ | = | டு |
| த் | + | உ | = | து |
| ப் | + | உ | = | பு |
| ற் | + | உ | = | று |

எனவே, குற்றியலுகரமொன்றின் இறுதியில் கு, சு, டு, து, பு, று ஆகிய எழுத்துக்கள் வரும். இவற்றுக்கு முன்வரும் எழுத்தை அடிப்படையாகக் கொண்டு இதனை ஆறு வகையாகப் பிரிப்பர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | வன்றொடர் | = | நாக்கு, பத்து, பேச்சு, பட்டு |
| 2. | மென்றொடர் | = | பஞ்சு, வண்டு, பந்து, குரங்கு |
| 3. | இடைத் தொடர் | = | பெய்து, செய்து, நல்கு, மார்பு, |
| 4. | உயிர்த் தொடர் | = | தராசு, கயிறு, மிளகு |
| 5. | நெடிற்றொடர் | = | ஆடு, காசு, சோறு, மாது |
| 6. | ஆய்தத் தொடர் | = | அஃது, எஃகு |

### 02. உயிரளபெடை

செய்யுளிலே ஓசை குறையும் இடத்து நெட்டுயிர்கள் சொல்லின் முதல், இடை, கடை நிலைகளில் தமக்குரிய இரண்டு மாத்திரையை விட நீண்டொலித்தல் உயிரளபெடை எனப்படும். இது பொதுவாக செய்யுள்களிலே பயன்படுத்தப்படும். **உதாரணம்**

தெய்வம் தொழாஅள் ..........

ஓஒதல் வேண்டும் ..........

## 03. ஒற்றளபெடை

செய்யுளில் ஓசை குறையுமிடத்து மெல்லின எழுத்துகளும் ர், ழ் தவிர்ந்த நான்கு இடையின எழுத்துகளும், ஆய்தமும் தமக்குரிய அரை மாத்திரையில் இருந்து நீண்டொலித்தல் ஒற்றளபெடை எனப்படும். ஏனைய சார்பெழுத்துக்கள் பற்றி மேல்வரும் வகுப்புகளில் கற்றுக் கொள்ளுங்கள்.

**உதாரணம்:-** இலங்ங்கு வெண்ண்பிறை, மடங்ங்கலந்த

தற்காலப் பாடல்களில் இசை கூட்டிப் பாடுவதற்காக உயிரளபெடையும் ஒற்றளபெடையும் பயன்படுத்தப்படுகின்றன.

## பயிற்சி

1. சார்பெழுத்து எனப்படுவது யாது?
2. பின்வரும் சொற்களுள் வன்றொடர்க் குற்றியலுகரம், இடைத்தொடர்க் குற்றியலுகரம் ஆகியவற்றை வேறுபடுத்தி எழுதுக.
   **பெய்து, நாக்கு, பட்டு, மார்பு, செய்து, பத்து**
3. பின்வரும்சொற்களுள் உயிரளபெடைகளையும் ஒற்றளபெடைகளையும் வேறுபடுத்தி எழுதுக.
   **இலங்ங்கு, ஓஒதல், அன்ன்பு மலர்கஏே, தொழாஅள், வாஅவெண்ணிலா, எங்ங்கே நிம்மதி**

## மொழி வளம்

### உவமைத்தொடர்

அணிகளிலே தலையாயது உவமை. செய்யுள்களிலும் உரைநடைப் பகுதிகளிலும் பொருளை விளக்குவதற்கு அது பெருந்துணைபுரியும். இலக்கியங்களில் பெரிதும் பயின்று வரும் உவமைத்தொடர்கள் சில இங்கு தரப்பட்டுள்ளன.

1. அணைகடந்த வெள்ளம் போல
2. அனலிடைப்பட்ட மெழுகு போல
3. ஆகாயக் கோட்டை கட்டியது போல
4. இலவு காத்த கிளிபோல
5. இலைமறை காய் போல
6. ஈருடலும் ஓருயிரும் போல
7. உட்சுவர் இருக்க புறச்சுவர் தீற்றுவது போல
8. ஊமை கண்ட கனவு போல

9. எய்தவன் இருக்க அம்பை நோவது போல
10. ஏட்டுச் சுரைக்காய் போல
11. ஒளியைக் கண்ட இருளைப் போல
12. கனியிருப்பக் காய் கவர்தல் போல
13. கிணற்றுத் தவளை போல
14. வளர்த்த கடா மார்பில் பாய்வது போல
15. செவிடன் காதில் ஊதிய சங்குபோல
16. சேற்றில் முளைத்த செந்தாமரை போல
17. இரண்டு தோணியில் கால் வைத்தது போல
18. மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்கியது போல
19. தீட்டிய மரத்திற் கூர் பார்ப்பது போல
20. நவில் தொறும் நூல் நயம் போல.

## பயிற்சி

**(i)** முதல் வரிசையில் உள்ள உவமைத்தொடர்களுக்கேற்ற உவமேயங்களை இரண்டாம் நிரையிலிருந்து தெரிந்து எடுத்து வாக்கியமாக்குக.

| | |
|---|---|
| 1. கண்ணை இமை காப்பது போல | 1. அந்த அறிஞர் வெளியுலகுக்குத் தெரியாதிருந்தார். |
| 2. கலங்கரை விளக்குப் போல | 2. படிக்காத அவன் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகள் பெற விரும்பினான். |
| 3. எட்டாப் பழத்திற்கு கொட்டாவி விட்டது போல | 3. அரசன் குடி மக்களைக் காத்தான். |
| 4. ஓரச்சில் உருக்கி வார்த்தாற் போல | 4. ஆசிரியர் வழிகாட்டியாக விளங்கினார். |
| 5. குடத்துள் விளக்குப் போல | 5. சகோதரிகள் இருவரும் விளங்கினர். |

**(ii)** இங்கு தரப்படாத வேறு சில உவமைத் தொடர்களைத் தேடி எழுதுக. அவற்றுக்கேற்ற உவமேயங்களை இணைத்து வாக்கியங்கள் எழுதுக.

**(iii)** நீங்கள் கற்ற பாடப்பரப்புகளில் இருந்து உவமைத் தொடர்களைக் கண்டறிந்து எழுதுக.

## ஆக்கத்திறன்

### கதை எழுதுவோம்

கதை ஒன்றை எழுதும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள்.

- கதைக்கரு
- பாத்திர வார்ப்பு
- மொழிநடை
- எடுப்பு, தொடுப்பு, முடிப்பு
- கதைக்குப் பொருத்தமான தலைப்பு

**பயிற்சி**

**(ii) கீழே தரப்பட்டுள்ள கதையின் தொடர்ச்சியை கற்பனை நயத்துடன் எழுதுங்கள்**

**‘‘ உடுக்கை இழந்தவன் கைபோலாங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு’’**

எமது உடலை விட்டு ஆடை நழுவும் சமயத்தில் எமது கைகள் உடனே சென்று அதனை நழுவவிடாமல் எமது மானத்தை காப்பாற்றுகிறது. அது போன்றே உண்மையான நட்புப் பூண்டவர்களும் ஆபத்துக் காலத்தில் உற்றதுணையாக இருக்க வேண்டும்.

வேலாயுதம் மாஸ்டர் ஒன்பதாம் தர வகுப்பறையில் தமிழ்ப்பாடம் கற்பித்துக் கொண்டிருக்கிறார். தனக்கேயுரிய பாணியில் பாடத்தை சுவாரசியமாக விளக்குகின்றார். இரண்டாம் வரிசையில் அமர்ந்திருக்கும் சேரன் இந்த ஒரு கிழமையாக ஏதோ ஒன்றைப் பறிகொடுத்தாற்போல் உட்கார்ந்து இருப்பதை மாஸ்டரும் அவதானித்துதான் இருக்கிறார். எல்லாப் பாடங்களிலும் தனது திறமையை வெளிப்படுத்தும் சேரன் மேல் வேலாயுதம் மாஸ்டருக்குத் தனி அன்புண்டு. இன்றும் கூட பாடத்தை அவதானிக்காமல் இருக்கும் சேரனை வகுப்பறையில் வைத்து என்ன? ஏது? என்று கேள்விகேட்க மாஸ்டர் விரும்பவில்லை. பாடசாலை விட்டதும் மாலையில் தனது வீட்டுக்கு ஒருமுறை வந்து போகுமாறு சேரனுக்குக் கூறுகிறார்.

மாலையில் தயங்கியபடி வந்த சேரனை வரவேற்று, பொதுவாக உரையாடிய மாஸ்டர் விடயத்துக்கு வந்தார். ‘‘ என்ன சேரன் வீட்டில் ஏதாவது ...... யாருக்காவது சுகமில்லையா? மாஸ்டர் அன்போடும் அக்கறையுடனும் விசாரித்தவுடன் சேரனின் கண்களிலிருந்து கண்ணீர் மள மளவென்று பெருகிற்று...........

சேரனின் பிரச்சினை என்ன? அதற்குத் தீர்வாக ஆசிரியர் என்ன கூறியிருப்பார்? போன்றவற்றைக் கற்பனை செய்து மிகுதிக் கதையை எழுதுங்கள்; கதைக்குப் பொருத்தமான தலைப்பிடுங்கள்.

**(ii)** ‘‘உள்ளத்தனையது உயர்வு’’ அல்லது ‘‘முயற்சி தன் மெய்வருந்தக் கூலிதரும்’’ என்ற தலைப்பில் கதை ஒன்று எழுதுங்கள்.